அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 21/2018

எனது இலக்கம் : ES/1/ சுற்றறிக்கை
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.09.28

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விடுவித்தல்</u>**

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 ஆனது வலுவிலிருக்கும் திகதி முதல் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதால், 2007.07.01 ஆந் திகதி முதல் 2012.05.15 ஆந் திகதி வரை இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களை அவர்களின் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைதாண்டலுக்கு உரித்தான இரண்டாம் மொழியின் வாய் மூலப் பரீட்சையினைப் பூர்த்தி செய்வதன் அவசியப்பாட்டில் இருந்து விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டள்ளது.

**02.** ஏற்கனவே 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள, நியமனக் கடிதத்தில் குறித்துறைக்கப்பட்டுள்ள இரண்டாம் அரசகரும மொழி வாய்மூலத் தேர்ச்சியினை உரிய திகதிக்கு பூர்த்தி செய்யாததன் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதியின் III ஆம் பிரிவின் கீழ் நன்னடத்தைக் காலத்தினை நீடித்து நியமனம் நிரந்தப்படுத்தப்பட்ட அலுவலர்களாயின், அந்நன்னடத்தைக் காலத்தினை திருத்தியமைப்பதற்கான கோரிக்கையினை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக இவ் அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**03.** அவ்வாறே சேவைப் பிரமாணத்தின் இடைக்கால ஏற்பாடுகளுக்கு ஏற்ப பதவியுயர்வினைப் பெறுவதற்கு தகைமை பெறும் 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க **<u>அல்லது</u>** அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் இடைநேர் வளைவுச் சுற்றறிக்கைக்கு உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றைய அரசகரும மொழித் தேவையினை, உரிய பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

04. இச் சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

பத்மசிரி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு